**OS No.219/2023**

**DW–4 –பழனிச்சாமி**

**த/பெ.சுப்பையகவுண்டர்**

**நாள். 08.07.2026.**

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி–4 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

1. பிரமாண பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் பிரதிவாதி சொல்லி தான் தெரியும் என்றால் எனக்கு முதலில் இருந்தே தெரியும். சண்முகம் அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் என்ன சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சண்முகம் எனக்கு சொன்னாரா என்றால் சொன்னார்.

2. 2007–ல் பஞ்சாயத்து நடந்தபோது நஞ்சப்பன் இருந்தாரா என்றால் இல்லை. 2007–ல் எந்த தேதியில் பஞ்சாயத்து எங்கு நடைபெற்றது என்று குறிப்பாக எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். உயில் சாசனம் 1967–ல் ஏற்படுத்தப்பட்டது தேதி எனக்கு தெரியாது. உயில் சாசனத்தில் இரண்டாம் ஐயிட்டமாக காட்டப்பட்டுள்ள வீடு எந்த காலை எண்ணில் அமைந்துள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நஞ்சப்பநாடார், சின்னசாமிக்கு எழுதிகொடுத்த செட்டில் மெண்ட் பத்திரத்தின் நகலை எழுதிகொடுத்ததை பார்த்தேனா என்றால் பார்த்தேன். சண்முகம் தான் அந்த ஆவணத்தை காட்டினாரா என்றால் ஆமாம்.

3. **வா.சா.ஆ–18** ஆவணத்தின் நகலை தான் என்னிடம் காட்டினார்களா என்றால் இருக்கலாம். தாவா சொத்தை பொறுத்து நஞ்சப்பநாடாருக்கு நத்தம் நிலவரித்திட்டத்தின் படி பட்டா வழுங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டா படி தான் நஞ்சப்ப நாடார் சின்னசாமிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2007–ல் இருந்து 2017 வரை சின்னசாமிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து

செய்யுமாறு நஞ்சப்ப நாடாரிடம் யாரும் கேட்கவில்லை என்று சொன்னால் அவர் அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். சின்னசாமி, சண்முகம் ஆகியோர் அவர்களுக்குள்ளாகவே சரி செய்து கொள்வதாக சொன்னதால் கேட்கவில்லை.

4. எந்த இடத்தில் பஞ்சாயத்து நடந்தது அந்த பஞ்சாயத்தில் எத்தனை நபர்கள் கூடி இருந்தார்கள் என்ற விவரம் எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் எனது காலத்தில் என்னென்ன சொத்துக்கள் வாங்கியுள்ளேன், அந்த சொத்துகளில் எவையவற்றை எந்தெந்த தேதியில் விற்பனை செய்துள்ளேன் என்ற விபரத்தை என்னால் தற்போது சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றும், சண்முகம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் காட்டிய ஆவணங்களின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்தும் நஞ்சப்ப நாடார், சின்னசாமிக்கு எழுதிக் கொடுத்த சொத்தும் ஒன்றல்ல என்றால் சரியல்ல.

5. எனது மனைவி பஞ்சாயத்து உறுப்பினராக இருந்த செல்வாக்கை பயன்படுத்தி வரி ரசீது போன்ற ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல. மூல ஆவணங்களை பார்க்காமல் செல்வாக்கை பயன்படுத்தி வரி ரசீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வீட்டின் கதவு எண் என்ன என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சொத்து நஞ்சப்பா நாடாருக்கு பாத்தியப்பட்டு, சின்னசாமிக்கு செட்டில் ஏற்படுத்தி கொடுத்தார்கள் என்றும் நான் சொல்வது போல் பாகப்பிரிவினை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

H.Mohamed Ansari
Digitally signed by H.Mohamed Ansari
Date: 2026.07.08 17:13:10 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.